No. of Printed Pages : 7

# 3361 (NS)

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## Part III — Vocational Subjects

(Agricultural Area)

# வேளாண் அறிவியல்
# AGRICULTURAL SCIENCE

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **மாற்று** விடைகளில் **மிகவும் ஏற்புடைய** விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** வெங்காயத்தில் குமிழ் உருவாக __________ நேரம் அவசியம்.

(அ) நடுநிலைப் பகல் (ஆ) குறைந்த பகல்

(இ) நீண்ட பகல் (ஈ) நீண்ட இரவு

[ திருப்புக / Turn over

2. கரும்பு முதிர்ச்சியூக்கியின் பெயர் __________ .

(அ) சோடியம் ஹைடிராக்சைடு (ஆ) சோடியம் குளோரைடு

(இ) சோடியம் மெட்டாசிலிகேட் (ஈ) சோடியம் பென்சோயேட்

3. தேயிலையின் அறிவியல் பெயர் __________ .

(அ) கோகஸ் நியூசிபெரா

(ஆ) அனகார்டியம் ஆக்ஸிடென்டேல்

(இ) அரிக்கா கெடச்சு

(ஈ) கேமெலியா சைனென்ஸிஸ்

4. வளி மண்டல தழைச்சத்தை வேர் முடிச்சுகளில் நிலை நிறுத்தச் செய்யும் பாக்டீரியா __________ .

(அ) ரைசோபியம் (ஆ) அசோஸ்பைரில்லம்

(இ) அசட்டோபாக்டர் (ஈ) பேசில்லஸ்

5. __________ ஒரு தாமிர பூசணக் கொல்லி.

(அ) போர்டோ கலவை (ஆ) காப்பர் ஆக்ஸி குளோரைடு

(இ) (அ) மற்றும் (ஆ) (ஈ) இவற்றில் ஏதுமில்லை

6. பயனுள்ள மரங்களை வளர்க்கும் முறைக்கு __________ என்று பெயர்.

(அ) டிராபி (ஆ) மல்பெரி வளர்ப்பு

(இ) வேளாண் காடுகள் வளர்ப்பு (ஈ) மரத்தொகுப்பு

7. விதை உற்பத்தி செய்யும்போது மலர்களில் உள்ள ஆண் பாகத்தை நீக்குதலுக்கு __________ என்று பெயர்.

(அ) கலவன் நீக்குதல் (ஆ) ஈமேஸ்குலேஷன்

(இ) கருவுறுதல் (ஈ) உறையிடுதல்

8. நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு, சிக்கனமான முறையில், தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்யும் செயலாக்கத் திட்டம் __________ எனப்படும்.

(அ) வளங்குன்றா வேளாண்மை (ஆ) நானோ தொழில்நுட்பம்

(இ) துல்லிய பண்ணைத் திட்டம் (ஈ) நவீன வேளாண்மை

9. நானோ உறைப்பொதியின் பயன் __________ .

(அ) பாதிப்பில்லா சுற்றுச்சூழல் (ஆ) செயற்கூறு வீரியம்

(இ) நீண்டகால பயன்பாடு (ஈ) இவை அனைத்தும்

10. (1) ஆந்த்ராக்ஸ் - (i) ஆம்பிசிலின்

(2) கோலி செப்டிசிமியா - (ii) ஸ்ட்ரெப்டோமைசின்

(3) கீட்டோசிஸ் - (iii) எரித்ரோமைசின்

(4) கொரைசா - (iv) கிளிசரின்

(அ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

(ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)

(இ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(ஈ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

**11.** இராணித் தேனீயின் ஆயுட்காலம் __________ ஆகும்.

(அ) ஒரு வருடம் (ஆ) 2 வருடங்கள்

(இ) 3 வருடங்கள் (ஈ) 4 வருடங்கள்

**12.** தோட்டக்கலைப் பயிர்களின் தேவை அதிகரிப்பதற்கான காரணம் __________.

(அ) தனிமனிதனின் வாங்கும் திறன் (ஆ) உணவு முறை

(இ) நகர்ப்புறமயமாதல் (ஈ) இவை அனைத்தும்

**13.** சைவ உணவுகளுக்கு __________ நிறக் குறியீடு இடப்படுகிறது.

(அ) மஞ்சள் (ஆ) பழுப்பு (இ) நீலம் (ஈ) பச்சை

**14.** மீன்களுக்கு அழுத்தம் மற்றும் பாதிப்பினை ஏற்படுத்துபவை __________ .

(அ) நச்சுயிரி (ஆ) தரம் குறைந்த நீர்

(இ) பூசணம் (ஈ) பாக்டீரியா

**15.** தரவுகளை ஒழுங்கான முறையில் தொகுப்பது __________ ஆகும்.

(அ) தரவுத்தளம் (ஆ) தகவல்

(இ) வழிகாட்டுதல் (ஈ) திட்டமிடல்

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

**16.** திட்டமிடல் என்றால் என்ன ? உற்பத்தித் திறனை அதிகரிக்கத் தேவையான வழிமுறைகள் இரண்டினை எழுதுக.

**17.** நெல் - பொருளாதார முக்கியத்துவத்தை பட்டியலிடுக.

**18.** மா ஒட்டுச் செடிகளை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளை எழுதுக.

**19.** தழைச்சத்து விரயமாகும் வழிகள் யாவை ?

**20.** எஞ்சிய நச்சு என்றால் என்ன ? அதிகபட்ச எஞ்சிய நச்சின் அளவு குறித்து குறிப்பு வரைக.

**21.** ஒருங்கிணைந்த பண்ணையத்தின் அடிப்படைத் தத்துவம் யாது ? ஒருங்கிணைந்த பண்ணையத்தின் நன்மைகள் இரண்டினைக் கூறுக.

**22.** இயற்கை பயிர் பாதுகாப்பு முறைகளை எழுதுக.

**23.** மண்புழுக்கள் வாழுமிடத்தை அடிப்படையாகக் கொண்டு எத்தனை வகையாகப் பிரிக்கலாம் ?

**24.** மாடித் தோட்டத்தின் பயன்கள் யாவை ?

**25.** கால அளவைப் பொருத்து சந்தையின் வகைகள் யாவை ? அவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றி குறிப்பு வரைக.

**26.** ஆடுகளைத் தாக்கும் நோய்கள் யாவை ? அவற்றுள் ஏதேனும் ஒரு நோயை விளக்கி, கட்டுப்பாடு முறையைக் கூறுக.

**27.** தொலை உணர்வியல் என்றால் என்ன ? அதன் பயன்பாடுகளில் ஏதேனும் இரண்டினை எழுதுக.

**28.** நானோ தொழில் நுட்பம் பற்றி நீவிர் அறிவதென்ன ?

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் 5** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

**29.** பயிர் இடைவெளி எக்காரணிகளைக் கொண்டு திட்டமிடப்படுகிறது ?

**30.** நாற்றங்கால் முறையில் துவரை எவ்வாறு சாகுபடி செய்யப்படுகிறது ?

**31.** ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் அவசியம் என்ன ?

**32.** செங்குத்துத் தோட்டத்தின் நன்மைகள் யாவை ?

**33.** வேளாண் விளைபொருட்களுக்கும், புனைந்து உருவாக்கும் பொருட்களுக்கும் இடையே விற்பனையில் உள்ள வேறுபாடுகள் யாவை ?

**34.** மீன்களைத் தாக்கும் பாக்டீரிய நோய்கள் பற்றி விரிவாக எழுதுக.

**35.** குழித்தட்டு நாற்றங்கால் முறையில், தக்காளி நாற்றுகளை எவ்வாறு உற்பத்தி செய்வாய் ?

## பகுதி - IV

**குறிப்பு : கீழ்க்கண்ட** வினாக்களுக்கு **இரண்டு பக்க அளவில்** விடையளிக்கவும்.

**2x10=20**

**36.** (அ) தென்னையில் குரும்பை உதிர்தல் ஏன் ஏற்படுகிறது ? அதனை எவ்வாறு நிவர்த்தி செய்வாய் ?

**அல்லது**

(ஆ) முருங்கை இரக விதை உற்பத்தியை விளக்குக.

**37.** (அ) உனது தோட்டத்தில் கிடைக்கும் கழிவுப்பொருளான வைக்கோலைக் கொண்டு காளான் வளர்க்கும் முறையினை எழுதுக.

**அல்லது**

(ஆ) ஒரு வணிக ரீதியான நாற்றங்காலை உருவாக்க நீ தெரிந்து கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்களை விளக்குக.

**- o O o -**